**கூடுதல் மாவட்ட உரிமையியல் நீதிமன்றம், பொள்ளாச்சி**

அ.வ.எண்.332/2015 வா.சா.1 சேகர்

SOLEMNLY AFFIRMED IN ACCORDANCE WITH THE PROVISIONS OF OATHS ACT OF 1969 OF THE DAY OF 04.03.2026

**சாட்சி மீண்டும் அழைக்கப்பட்டு 6 முதல் 8 பிரதிவாதிகள் தரப்பில் குறுக்குவிசாரணை**

1) வழக்கு கோவில்கள் 22-09-1945 தேதியிட்ட வா.சா.ஆ.1 பாக சாசனப்படி பழனிதேவரின் மகன்களான ராமசாமி தேவர் மற்றும் சுப்பையா தேவர் ஆகியோர் பாகத்திற்கு உட்பட்டது என்றால் சரிதான். மேற்படி பாக சாசனத்தில் என் தாத்தா சுப்பையா தேவர் தான் வழக்கு கோவில்களை பூஜை , உற்சவம் நடத்தி கொண்டு வரவேண்டியது என கண்டுள்ளது என்றால் சரிதான். மேற்படி பாக சாசன தேதியிலிருந்து என் தாத்தா சுப்பையா தேவர் தான் வழக்கு கோவில்களை நிர்வகித்து வந்தார் என்றால் சரிதான்.

2) அதன் பின்னிட்டு என் தாத்தா சுப்பையா தேவர் என் தந்தை கண்ணிமுத்த தேவர் சித்தப்பாக்கள் சண்முக தேவர் மற்றும் காமாட்சி தேவர் ஆகியோர் 04-03-1959 தேதியிட்ட பாக சாசனத்தை வழக்கு கோவில் நிர்வாகம் பொருத்து ஏற்படுத்தினார் என்றால் சரிதான். 17-02-1975 ல் என் தாத்தா இறப்பிற்கு பின் என் தந்தையும் சித்தப்பாக்களும் சேர்ந்து தான் வழக்கு கோவில்களை நிர்வகித்தனர் என்றால் சரிதான். என் தந்தை மற்றும் சித்தப்பாக்கள் மறைவிற்கு பின்னிட்டு நானும் 6 முதல் 8 பிரதிவாதிகளும் சேர்ந்து தான் வழக்கு கோவில்களை நிர்வகித்து வருகிறோம் என்றால் சரிதான்.

3) வழக்கு கோவில்களில் எங்கள் பங்காளிகளான அகமுடையர் , முக்கந்தர் குலத்தை சேர்ந்வர்களும் மற்றும் பொது மக்களும் வழிபடலாம் என்றால் சரிதான். வழக்கு கோவில்களுக்கான பூஜைகளையும் வழிபாட்டு முறைகளையும் நானும் 6 முதல் 8 பிரதிவாதிகளும் சேர்ந்து தான் நிர்வகித்து வருகிறோம் என்றால் சரிதான். எங்கள்

பங்காளிகளுக்கிடையே நடைபெறும் ஆண்டு விழாக்களையும் நானும் 6 முதல் 8 பிரதிவாதிகளும் சேர்ந்து தான் முன்னின்று நடத்தி வருகிறோம் என்றால் சரிதான். என்னிடமும் 6 முதல் 8 பிரதிவாதிகளிடமும் கோவிலுக்குண்டான சாவி ஆளுக்கு ஒன்று இருக்கும் என்றால் சரிதான். வாரம் தோறும் செவ்வாய் , வெள்ளி மற்றும் சிறப்பு நாட்களில் நடைபெறும் பூஜைகளில் நானும் 6 முதல் 8 பிரதிவாதிகளும் சேர்ந்து தான் முன்னின்று நடத்தி வருகிறோம் என்றால் சரிதான். பிற நாட்களில் வழிபட விரும்புவோர் எங்கள் நால்வரில் ஒருவரிடம் சாவி வாங்கி வந்து வழிபடுவர் என்றால் சரிதான்.

4) நான் வழக்கு கோவில்கள் நிர்வாக உரிமை பற்றி பரிகாரம் கோரியுள்ள நிலையில் 6 முதல் 8 பிரதிவாதிகளுக்கும் கோவில் நிர்வாகத்தில் உரிமை உள்ளது என நீதிமன்றம் தீர்ப்பளிப்பதில் எனக்கு ஆட்சேபணை இல்லை என்றால் சரிதான். நாளது தேதி வரை வழக்கு கோவில்கள் பூசாரியை நானும் 6 முதல் 8 பிரதிவாதிகளும் சேர்ந்து தான் நிர்வகித்து வருகிறோம் என்றால் சரிதான். இவ்வழக்கில் இ.ம.எண். 6/2023 ல் என்னையும் 6 முதல் 8 பிரதிவாதிகளையும் சேர்க்காமல் 1 முதல் 5 பிரதிவாதிகள் தன்னிச்சையாக வழக்கு கோவில் விழாக்களை வழக்கு முடியும் வரை நடத்தக்கூடாது என இடைக்கால உறுத்துகட்டளை வழங்கப்பட்டது என்றால் சரிதான்.

5) அதனால் வழக்கு கோவில்கள் நிர்வாகம் எனக்கும் 6 முதல் 8 பிரதிவாதிகளுக்கும் முழுமையாக பாத்தியப்பட்டது என்றால் சரிதான். ஆண்டு தோறும் பொங்கல் காலத்தில் கோவில்களை தூய்மைப்படுத்தும் பணிக்கான செலவுகளையும் சென்ற ஆண்டு கோவில் கலசம் நிர்மானித்த செலவையும் நானும் 6 முதல் 8 பிரதிவாதிகளும் சேர்ந்து தான் செய்தோம் என்றால் சரிதான். எங்கள் முன்னோர்கள் ஆவணங்கள் படியும் கோவில் நிர்வாகம் மற்றும் பூஜை ஆகியவை தற்போது வரை நானும் 6 முதல் 8 பிரதிவாதிகளும் சேர்ந்து தான் நடத்தி

வருகின்ற முறைப்படியும் இவ்வழக்கில் கோவில் நிர்வாக உரிமை வாதியாகிய எனக்கு மட்டும் அல்லாது 6 முதல் 8 பிரதிவாதிகளுக்கும் உண்டு என தீர்ப்பாக வேண்டும் என்றால் சரிதான்.

**<u>10 முதல் 14 பிரதிவாதிகள் தரப்பில் குறுக்குவிசாரணை</u>**

1) 2015 ல் வழக்கு தாக்கல் செய்யப்படும் போது 1 முதல் 5 பிரதிவாதிகள் சட்டவிரோதமாக வழக்கு கோவில்களுக்குள் நுழைந்து இடையூறு செய்யக்கூடாது என்று தான் பரிகாரம் கோரி இருந்தேன் என்றால் சரிதான். வழக்குரை பத்தி 10 ல் "*மேற்படி வாதி வைஷ பிரதிவாதிகளை ஷை கோவிலுக்கு சாமி தரிசனம் செய்ய வேண்டாம்என்றோ, அவர்களை வரவேண்டாம் என்றோ எந்தவிதத்திலும் தடுக்கவில்லை . மேலும் ஷை கோவிலுக்கு எந்தப்பொது மக்கள் வந்தாலும் , அனுமதி மறுக்க வாதி தயாராக இல்லை. மேலும் எந்த பொது மக்களும்வந்து சாமி தரிசம் செய்ய வாதிக்கு எந்தவிதமான ஆட்சேபணையும் இல்லை.*"என குறிப்பிடப்பட்டிருந்தது என்றால் சரிதான்.

2) 2015 ல் வழக்கு தாக்கல் செய்யப்பட்ட போது 6 முதல் 8 பிரதிவாதிகள் தரப்பினராக இல்லாத சமயத்திலும் கோவில் நிர்வாகத்தில் அவர்களுக்கும் உரிமை உள்ளது என்பதை கூறியுள்ளேன் என்றால் சரிதான். அதன் பின்னர் வழக்கு பரிகாரத்தை திருத்தி உள்ளேன் என்றால் சரிதான். திருத்தப்பட்ட பரிகாரத்தில் 6, 7 , 8 பிரதிவாதிகளை தவிர்த்து தான் நிரந்தர உறுத்துகட்டளை கோரியுள்ளேன் என்றால் சரிதான். நான் பரிகாரத்தில் வாதியின் அனுபவ சுவாதீனத்தில் உள்ள கோவில்கள் என்று குறிப்பிட்டு உள்ளேன் என்றும் அவை எனக்கு பாத்தியப்பட்டது என குறிப்பிடவில்லை என்றும் சொன்னால் சரிதான்.

3) வா.சா.ஆ. 1 பாக சாசனம் சுப்பைய தேவரும் , ராமசாமி தேவரும் ஏற்படுத்திக் கொண்டது என்றால் சரிதான். வா.சா.ஆ. 1 பாக சாசனத்தில் சி அட்டவணை சொத்தில் 9.50 ஏக்கர் சொத்து குறிப்பிடப்பட்டுள்ள போது அதில் வழக்கு கோவில்கள் குறிப்பிடப்படவில்லை

என்றால் சரிதான். ( **சாட்சி மேற்படி பதில் அளித்த உடன் 6 முதல் 8 பிரதிவாதிகள் தரப்பு வழக்கறிஞர் அதில் வழக்கு கோவில்கள் உள்ளது என கூறினார் அதனை கேட்ட சாட்சி தனது பதிலை மாற்றி அதில் வழக்கு கோவில் உள்ளது என கூறுகிறார்.**) மேற்படி 9.50 ஏக்கர் சொத்தில் வரும் வருமானத்தை கொண்டு காப்பிலிபாளையத்தில் உள்ள காமாட்சி அம்மன் கோவில் மற்றும் மெய்யம்மன் கோவில்களுக்கு பூஜை மற்றும் உற்சவத்திற்கு செலவு செய்ய வேண்டும் என்று தான் கண்டுள்ளது என்றால் சரிதான். வா.சா.ஆ 1 பாக சாசனத்தில் எங்களுக்கு பாத்தியப்பட்ட காமாட்சி அம்மன் கோவில் மற்றும் மெய்யம்மன் கோவில்களுக்கு பூஜை மற்றும் உற்சவத்திற்கு செலவு செய்ய வேண்டும் என்று குறிப்பிடவில்லை என்றால் சரியல்ல.

4) வா.சா.ஆ. 1 பாக சாசனத்திற்கு தாய் ஆவணம் அம்மாசி தேவர், சின்ன பழனி தேவர் மற்றும் பழனிதேவர் ஆகியோர் 24-03-1936 தேதியிட்ட பாக சாசனம் என்றால் சரிதான். ( **24-03-1936 தேதியிட்ட பாக சாசனம் சான்றிட்ட நகல் பி.வா.சா.ஆ. 6 ஆக குறியீடு செய்யப்படுகிறது.**) பி.வா.சா-ஆ. 6 பாக சாசனத்தில் டி அட்டவணைச் சொத்தாக தான் மேற்படி 9.50 ஏக்கர் பூமி காட்டப்பட்டுள்ளது என்றால் சரிதான். பி.வா.சா.ஆ. 6 பாக சாசனத்திலும் காப்பிலிபாளையத்தில் உள்ள காமாட்சி அம்மன் கோவில் மற்றும் மெய்யம்மன் கோவில்கள் என்று தான் குறிப்பிடப்பட்டுள்ளது என்றும் அது எங்கள் பாத்தியப்பட்ட கோவில்கள் என குறிப்பிடப்படவில்லை என்றால் சரியல்ல.

5) பி.வா.சா.ஆ. 6 , வா.சா.ஆ. 1 மற்றும் வா.சா.ஆ 2 பாக சாசனங்களில் என் முன்னோர்களுக்கு வருமானத்தை கொண்டு கோவில்களுக்கு செலவு செய்யும் உரிமை மட்டுமே கொடுக்கப்பட்டது என்றும் அவற்றில் எங்கும் கோவில்களை நிர்வகித்து கொள்ளும் உரிமை வழங்கப்படவில்லை என்றும் சொன்னால் சரியல்ல.

6) வழக்கு சொத்தாக காட்டப்பட்டுள்ள புல எண். 179/17 ல் உள்ள 10 செண்ட் அளவுள்ள கோவில்களுக்கு என் பெயரிலோ , என் குடும்பத்தார் பெயரிலோ இருப்பதாக நான் வருவாய் ஆவணங்கள் ஏதும் தாக்கல் செய்யவில்லை என்றால் சரிதான். என் தாத்தா சுப்பைய தேவர் அறநிலைய துறையில் பெற்றதாக சொல்லும் வா.சா.ஆ. 3 மனு மற்றும் உத்தரவில் மற்றொரு கூட்டு உரிமையாளராக கூறப்படும் ராமசாமி சேர்க்கப்படவில்லை என்றால் அது பற்றி எனக்கு தெரியாது. வா.சா.ஆ 3 மனுவில் மேற்படி காமாட்சி அம்மன் கோவில் மற்றும் மெய்யம்மன் கோவில்கள் பொது கோவில்கள் அல்ல எனவும் தனிப்பட்ட கோவில்கள் எனவும் பரிகாரம் கோரியுள்ள நிலையில் பொது மக்கள் யாரும் அதில் கட்சி சேர்க்கப்படவோ, விசாரணைகள் விசாரிக்கப்படவோ இல்லை என்றால் சரிதான்.

7) வா.சா.ஆ. 3 மனுவில் ஒரு அறை அமைக்கப்பட்டு அதில் கோவில் பொருட்கள் வைக்கப்பட்டதாக தான் குறிப்பிடப்பட்டுள்ளது என்றால் சரிதான். வா.சா.ஆ .3 மனுவில் என் தாத்தா 1945 பாக சாசனப்படி தனக்கு பாத்தியப்பட்ட வீட்டிற்கு அருகில் உள்ள அறை என்று மட்டுமே குறிப்பிட்டு உள்ளார் என்றும் அந்த அறை எந்த புல எண்ணில் உள்ளது என்றோ அதன் அளவுகளோ குறிப்பிடவில்லை என்றும் சொன்னால் சரிதான்.

8) வா.சா.ஆ. 3 மனுவில் என் தாத்தா மேற்படி காமாட்சி அம்மன் கோவில் மற்றும் மெய்யம்மன் கோவில்கள் தனக்கு பாத்தியப்பட்டது என விளம்புகை செய்ய கோரி இருந்தார் என்றால் சரிதான்.ஆனால் வா.சா.ஆ. 3 உத்தரவில் ஒரு சட்டப்பிரிவு குறிப்பிடப்பட்டு அந்த கோவில்கள் அந்த அட்டவணையில் வராது என்றே குறிப்பிடப்பட்டுள்ளது என்றால் சரிதான். வா.சா.ஆ 3 உத்தரவு ஆனது மேற்படி 9.50 ஏக்கர் பூமியில் இருந்து வரும் வருமானத்தை கொண்டு கோவில் தர்ம காரியங்கள் செய்ய ஏற்படுத்திய Endowment பொருத்ததாகவே கருதப்படும் என்றால் சரிதான்.

9) நான் தாக்கல் செய்து உள்ள வா.சா.ஆ.10 கிராம நிர்வாக அலுவலர் சான்றில் காமாட்சி அம்மன் கோவில் மற்றும் மெய்யம்மன் கோவில்களை என் தாத்தா குடும்பத்தார் பராமரித்து வருவதாக தான் குறிப்பிடப்பட்டுள்ளது என்றும் பாத்தியப்பட்டது என குறிப்பிடவில்லை என்றும் சொன்னால் சரிதான்.

10)வா.சா.ஆ.11 மற்றும் வா.சா.ஆ 12 தீர்ப்புகள் தனிப்பட்ட நபர்களுக்கிடையிலான சொத்து பிரச்சனை தொடர்புடையது என்றால் சரிதான். நான் எப்போதில் இருந்து கோவில் நிர்வாகத்தை பார்த்து வருகிறேன் என்றால் 2004 ல் என் தந்தை காலமானதிலிருந்து கோவில் நிர்வாகத்தை பார்த்து வருகிறேன்.

11) என் வழக்குரையில் சுப்பைய தேவர் ஆண் வாரிசுகள் ஆண்டுக்கு ஒரு முறை வைத்து கோவில் நிர்வாகத்தை பார்த்து வருவதாக குறிப்பிட்டு உள்ளேன் என்றால் சரிதான். என் தந்தை இறப்பிற்கு பின்னிட்டு என் தாத்தாவின் ஆண் வாரிசுகள் நீதிமன்றத்தை நாடி எங்களுக்குள் எந்தெந்த ஆண்டுக்கு யாரது முறை என எவ்வித உத்தரவும் பெற்றுக் கொள்ளவில்லை என்றால் சரிதான். என் தாத்தாவின் ஆண் வாரிசுகள் எங்களுக்குள் எந்தெந்த ஆண்டுக்கு யாரது முறை என குறிப்பிட்டு ஆவணம் ஏதும் எழுதிக்கொள்ளவில்லை என்றால் சரிதான்.

12) பி.வா.சா.ஆ. 6 , வா.சா.ஆ. 1 மற்றும் வா.சா.ஆ 2 பாக சாசனங்களில் குறிப்பிடப்பட்டுள்ள உற்சவம் என்பது ஆண்டு தோறும் ஆவணி மாதத்தில் சாமி சிலையை ஊர்வலமாக கொண்டு வருவது தான் என்றால் சரிதான் . 2004 க்கு பின்னிட்டு எத்தனை உற்சவம் என் தலைமையில் நடைபெற்றது என்றால் சுமார் 6 முறை இருக்கும்.

13)நானும் பிரதிவாதிகளும் ஒரே சமுகத்தை சேர்ந்தவர் என்றால் சரிதான். காப்பிலிபாளைய கிராமத்தில் எங்கள் சமூகத்தினர் தான் பெரும்பான்மையினர் என்றால்

சரிதான். மேற்படி காமாட்சி அம்மன் கோவில் எங்கள் குல தெய்வம் என்றால் சரிதான். மேற்படி கோவில்கள் உற்சவத்தை எங்கள் சமூகத்தினர் அனைவரும் சேர்ந்து தான் நடத்துவோம் என்றால் சரிதான். மேற்படி உற்சவம் 5 நாட்கள் நடைபெறும் என்றால் சரிதான். 5 நாள் விழா என்பதால் அதற்கான செலவு அதிகமாக இருக்கும் என்றால் சரிதான். மேற்படி பூமி வருமானத்துடன் விருப்பம் உள்ளவர்கள் கொடுக்கும் பணத்தையும் சேர்த்து தான் விழா செலவு செய்யப்படும் என்றால் சரிதான். 2015 ல் வழக்கு தாக்கல் செய்யப்பட்ட பிறகு உற்சவம் நடைபெறவில்லை என்றால் சரிதான்.

14) சுமார் 2 ஆண்டுகளுக்கு முன்பு 1 முதல் 5 பிரதிவாதிகள் உற்சவம் நடத்த முற்பட்ட போது தான் 6 முதல் 8 பிரதிவாதிகள் தாக்கல் செய்த இ.ம.எண். 6/2023 ல் என்னையும் 6 முதல் 8 பிரதிவாதிகளையும் சேர்க்காமல் 1 முதல் 5 பிரதிவாதிகள் தன்னிச்சையாக வழக்கு கோவில் விழாக்களை வழக்கு முடியும் வரை நடத்தக்கூடாது என இடைக்கால உறுத்துகட்டளை வழங்கப்பட்டது என்றால் சரிதான்.

15) 1 முதல் 5 பிரதிவாதிகள் ஒருபோதும் மேற்படி 9.50 ஏக்கர் பூமியில் உரிமை இருப்பதாகவோ, அதில் வரும் வருமானத்தில் உரிமை இருப்பதாகவோ கோரியதில்லை என்றால் சரிதான். 1 முதல் 5 பிரதிவாதிகள் தாங்கள் தான் கோவிலுக்கு தலைவராகவோ, செயலாளராகவோ, அறங்காவலராகவோ செயல் பட்டு கோவில் நிர்வாகத்தை மேற்கொள்வோம் என ஒருபோதும் எந்த அதிகாரியிடமும் முறையிடவில்லை என்றால் சரிதான்.

16) வா.சா.ஆ. 5 பதிவேட்டில் எழுதப்பட்டுள்ள வரவு செலவு கணக்கிற்கு அதற்கான பில்களோ, வவுச்சர்களோ அதனுடன் இணைக்கப்படவில்லை என்றால் சரிதான். வா.சா-ஆ. 5 பதிவேட்டில் எங்கும் ஆண்டுக்கு ஒரு முறையோ , பத்தாண்டுக்கு ஒரு முறையோ

கணக்குகளை சரிபார்த்து சரியென ஒப்புதல் குறிப்பு ஏதும் ஏற்படுத்தவில்லை என்றால் சரிதான். வழக்கு சொத்தில் குறிப்பிடப்பட்டுள்ள கோவில்களில் எனக்கும் , 6 முதல் 8 பிரதிவாதிகளுக்கும் பாத்தியம் இல்லை என்றும் எங்கள் முன்னோர்களின் ஆவணப்படி பூமிகளில் இருந்து வரும் வருமானத்தை கொண்டு பூஜை மற்றும் உற்சவத்திற்கான செலவை மட்டுமே செய்து கொண்டு வருகிறோம் என்றும் சொன்னால் சரியல்ல.

17) 1 முதல் 5 பிரதிவாதிகள் உட்பட எங்கள் சமூகத்தினர் சேர்ந்து நடத்தி வந்த உற்சவ விழாவில் ஏற்பட்ட கருத்து வேறுபாடு காரணமாக தான் இவ்வழக்கை தாக்கல் செய்து உள்ளேன் என்றால் சரிதான். நான் வழக்கு தாக்கல் செய்ததால் கடந்த 10 ஆண்டுகளாக கோவில்கள் உற்சவம் நடைபெறாமல் உள்ளது என்றால் சரிதான்.

18) நான் பிராதில் கூறியவாறு 1 முதல் 5 பிரதிவாதிகளோ 9 முதல் 14 பிரதிவாதிகளோ ஒருபோதும் கோவில்களுக்கு எதிரான எவ்வித சட்டவிரோதமான செயல்களில் ஈடுபடவில்லை என்றால் சரிதான். இவ்வழக்கு பொய்யான காரணங்கள் கண்டு தனிப்பட்ட காழ்ப்புணர்ச்சியில் தாக்கல் செய்யப்பட்டு உள்ளதால் நிலைக்கதக்கது அல்ல என்றால் சரியல்ல.

| |
|---|
| இச்சாட்சியம் என் முன்பு திறந்த நீதிமன்றத்தில் சாட்சி கூறியபடி நான் கூற தட்டச்சரால் தட்டச்சு செய்யப்பட்டு சாட்சிக்கு படித்துக் காட்டப்பட்டு அது சரி என்று அவரால் ஏற்றுக்கொள்ளப்பட்டது. |

**ஒப்பம்/-(மு.ச.ஸ்ரீநாத்)**

கூடுதல் மாவட்ட உரிமையியல் நீதிபதி

பொள்ளாச்சி